# பணமும் வங்கித் தொழிலும்

**பணநிரம்பல்**


வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் (தேறிய) ஏற்பட்ட வீழ்ச்சி, உள்நாட்டுக் கொடுகடனின் குறைந்தளவு விரிவாக்கம் என்பனவற்றின் காரணமாக விரிந்த பணநிரம்பலின் ($M_2$) வளர்ச்சிவீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியே 1986 இன் நாணய அபிவிருத்திகளில் காணப்பட்ட முக்கிய பண்பாக இருந்தது. பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம் மற்றும் கேள்வி வைப்புக்களை உள்ளடக்கியதான குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1985 இன் ரூ. 19,370 இலட்சம் அல்லது 12 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 24,180 இலட்சத்தினால் அல்லது 13 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகள் வசமுள்ள தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலிநாணயம்) ரூ. 330 இலட்சத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. இதன் விளைவாக $M_1$ ஐயும் போலிநாணயத்தையும் உள்ளடக்கியதென வரைவிலக்கணம் செய்யப்படும் விரிந்த பணநிரம்பல் ($M_2$) 1986 இல் ரூ. 24,510 இலட்சத்தால் அல்லது 5 சதவீதத்தால் உயர்வடைந்தது. இது முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட ரூ. 49,820 இலட்சம் அல்லது 11 சதவீதம் கொண்ட வளர்ச்சியின் அரைப்பங்கிற்கும் குறைவானதாகும்.

இவ்வாண்டில் $M_1$ இல் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பொதுமக்கள் வசமிருந்த நாணயம் ரூ. 17,540 இலட்சத்தினால் அல்லது 18 சதவீதத்தினால் உயர்வடைந்தமையே முக்கிய காரணமாகும். இதனை 1985 இன் ரூ. 12,550 இலட்சம் அல்லது 15 சத வீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடலாம். 1985 இல் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து நாயண உடைமைகளில் மிக உயர்ந்த மாதாந்த அதிகரிப்புக் காணப்பட்ட மார்ச்சில் 9 சதவீத உயர்வு பதிவு செய்யப்பட்டமை ஏப்பிறல் பண்டிகைக் காலத்திற்கு முன்னதாகக் காசிற்கு ஏற்பட்ட உயர்வடைந்த கேள்வியைப் பிரதி பலிப்பதாகவுள்ளது. அதேவேளை பொது மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் 1985 இன் ரூ. 6,830 இலட்சம் அல்லது 8 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 6,640 இலட்சம் அல்லது 7 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்விளைவாக $M_1$இல் கேள்வி வைப்புக்களின் பங்கு 1985 இறுதியிலிருந்த 48 சத வீதத்திலிருந்து 1986 இறுதியில் 45 சத வீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. பண நிரம்பலில் நாணயக்கூறின் சார்புரீதியான உயர்ந்த வளர்ச்சி 1984 இன் பின்னர் அவதானிக்கப்பட்ட வியக்கத்தக்கதொரு தன்மையாக இருந்ததுடன் இதற்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் கட்டுப்பாடற்ற வங்கித் தொழில் பணிகளைப் பொதுமக்கள் அனுபவிக்க முடியாமல் போனமையும் ஓரளவு காரணமாகும்.

மீளாய்விற்குரிய ஆண்டில் போலிநாணயம் 1985 இன் ரூ. 30,440 இலட்சம் அல்லது 11 சதவீதங்கொண்ட கணிசமான அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 330 இலட்சத்தினால் மட்டும் அதிகரித்தது. போலிநாணயத்தில் ஏற்பட்ட குறைவான வளர்ச்சிக்கு 1986 இல் அரச கூட்டுத்தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 10,670 இலட்சத்தினால் அல்லது 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே பெருமளவு காரணமாகும். அத்தகைய வைப்புக்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த இரண்டு நிறுவனங்களாக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும், இலங்கை மின்சபையும் காணப்பட்டன. அரச பெருந்தோட்டக்கூட்டுத்தாபனத்தின் வைப்புக்கள் வீழ்ச்சியுற்றமைக்கு முக்கியமாக தேயிலை

## பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.44

## நாணயக் கூட்டுக்கள் 1984 – 1986

தொகை ரூபா பத்து இலட்சங்களில்

| | குறுகிய பண நிரம்பல் (M1) | | | | | | விரிந்த பண நிரம்பல் (M2) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1983ஐ விட 1984இல் %மாற்றம் | 1984ஐவிட 1985இல் %மாற்றம் | 1985ஐ விட 1986இல் % மாற்றம் | 1984 | 1985 | 1986 | 1983ஐ விட 1984இல் %மாற்றம் | 1984ஐ விட 1985இல் % மாற்றம் | 1985ஐ விட 1986இல் % மாற்றம் |
| சனவரி ... | 14,964 | 16,522 | 18,456 | +26.3 | +10.4 | +11.7 | 38,277 | 43,923 | 48,498 | +24.3 | +14.8 | +10.4 |
| பெப்புருவரி ... | 14,939 | 16,595 | 19,062 | +22.1 | +11.1 | +14.9 | 39,031 | 44,849 | 48,587 | +23.1 | +14.9 | + 8.3 |
| மாச்சு ... | 15,439 | 17,237 | 20,454 | +18.9 | +11.7 | +18.7 | 39,762 | 45,230 | 49,410 | +21.0 | +13.8 | + 9.2 |
| எப்பிறல் ... | 15,317 | 17,332 | 20,287 | +19.3 | +13.2 | +17.1 | 39,629 | 46,019 | 49,335 | +19.7 | +16.1 | + 7.2 |
| மே ... | 14,331 | 17,208 | 20,043 | +13.7 | +20.1 | +16.5 | 39,133 | 46,092 | 49,119 | +20.4 | +17.8 | + 6.6 |
| யூன் ... | 14,768 | 17,339 | 19,949 | +17.3 | +17.4 | +15.1 | 39,690 | 46,233 | 48,959 | +21.0 | +16.5 | + 5.9 |
| யூலை .. | 14,901 | 16,969 | 19,615 | +14.9 | +13.9 | +15.6 | 39,642 | 46,631 | 48,882 | +17.1 | +17.6 | + 4.8 |
| ஓகத்து .. | 14,811 | 17,232 | 19,731 | +14.1 | +16.4 | +14.5 | 39,767 | 46,991 | 48,771 | +17.9 | +18.2 | + 3.8 |
| செத்தெம்பர் .. | 15,549 | 17,460 | 20,399 | +16.7 | +12.3 | +16.8 | 40,808 | 47,917 | 49,430 | +17.9 | +17.4 | + 3.2 |
| ஒற்ரோபர் ... | 16,041 | 17,768 | 20,219 | +18.2 | +10.8 | +13.8 | 41,586 | 48,359 | 49,868 | +17.8 | +16.3 | + 3.1 |
| நவெம்பர் ... | 15,678 | 18,187 | 20,293 | +15.8 | +16.0 | +11.6 | 42,007 | 47,247 | 50,057 | +18.9 | +12.5 | + 6.0 |
| திசெம்பர் ... | 16,824 | 18,761 | 21,179 | +14.1 | +11.5 | +12.9 | 43,427 | 48,409 | 50,860 | +16.6 | +11.4 | + 5.1 |
| மாதாந்த சராசரி | 15,297 | 17,384 | 19,974 | +17.5 | +13.7 | +14.9 | 40,230 | 46,492 | 49,315 | +19.5 | +15.6 | + 6.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

விலைகள் குறைவடைந்தமை காரணமாக இருந்த வேளையில் இலங்கை மின் சபையின் வைப்புக்கள் மிகக்கூடிய அளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு அரச திறைசேரி உண்டியல் சந்தையில் முதலீடு செய்வதற்காக நிதிகள் மீளப்பெறப்பட்டமையே காரணமாக இருந்தது.

அதேவேளை 1986 இல் ஏனைய தனியார்துறைக்கூறுகளின் அதாவது உண்மையான தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 26,370 இலட்சம் அல்லது 13 சதவீதம் கொண்ட மிகக்கூடியளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 10,320 இலட்சம் அல்லது 4 சதவீதங்கொண்ட குறைந்தளவு வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஏனைய தனியார்துறைக்கூறுகளின் போலிநாணயத்தில் ஏற்பட்ட குறைவான வளர்ச்சிக்கு ஏனைய காரணிகளுடன் ஏற்றுமதித்துறையின் செழிப்பு குறைவாக இருந்தமையும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் வங்கித்தொழில் பணிகளின் கிடைக்கும் தன்மை கட்டுப்படுத்தப்பட்டமையுமே காரணங்களாகும். எனினும் 1986 இல் கூட்டுறவு நிறுவனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 690 இலட்சத்தினால் அல்லது 11 சதவீதத்தினால் அதிகரித்தன.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 1986 இல் வெளிநாட்டுத்துறை நாணயக் கூட்டுக்களின் மீது சுருக்கத்தாக்கத்தை ஏற்படுத்தியது. 1986 இல் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) 1985 இன் ரூ. 6,910 இலட்சம் அல்லது 7 சதவீதங்கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 4,140 இலட்சத்தினால் அல்லது 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மத்தியவங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலும் (ரூ. 2,380 இலட்சம்) வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டு செலாவணி உடமைகளிலும் (ரூ. 1,750 இலட்சம்) காணப்பட்ட வீழ்ச்சிகள் ஒன்றுசேர்ந்து இவ்வாண்டில் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் (தேறிய) வீழ்ச்சிக்கு வகைகூறின.

சென்மதி நிலுவையின் வர்த்தகக் கணக்கும் நடைமுறைக்கணக்கும் தாழ்ந்த எரிபொருள் விலைகளினது சாதகமான தாக்கத்தின் பெருமளவு காரணமாக குறைந்தளவு பற்றுக்குறையினைப் பதிவு செய்திருப்பினும் முழுப்பற்றுக்குறையையும் ஈடுசெய்யும் வகையில் போதுமானளவு மூலவளங்களை திரட்டக்கூடிய நிலையில் நாடு இருக்கவில்லை. இவ்வாண்டில் தனியார் மாற்றல்கள், அலுவல்சார் மாற்றல்கள் இரண்டினதும் உட்பாய்ச்சல்கள்( தேறிய) வீழ்ச்சியடைந்தன. இச்சூழ்நிலையில் 1986இல் சென்மதி நிலுவை ரூ. 21,240 இலட்சங்கொண்ட திரண்டபற்றுக்குறையைப் பதிவு செய்து நாட்டின் சென்மதி நிலுவையில் தொடர்ந்துவரும் நலிவினை வலியுறுத்தியது.


இவ்வாண்டில் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) வீழ்ச்சியடைந்தமையினால் 1986 இல் பணநிரம்பலின் வளர்ச்சிக்கு உதவிய மிகக் குறிப்பிடத்தக்க காரணியாக ரூ. 48,830 இலட்சம் அல்லது 8 சதவீதத்தினால் உயர்வடைந்த உள்நாட்டுக்கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு விளங்கியது. ஒப்பிடுகையில் 1985 இல் உள்நாட்டுக்கொடுகடன் ரூ. 93,000 இலட்சம் அல்லது 19 சதவீதத்தினால் மிகப்பெருமளவிற்கு அதிகரித்தது. உள்நாட்டுக் கொடுகடனின் மெதுவான விரிவாக்கத்திற்கு அரசிற்கான தேறிய கொடுகடன், தனியார்துறைக்கான மொத்தக்கொடுகடன் இரண்டினதும் குறைவடைந்த வளர்ச்சியே காரணமாகும். 1986 இல், அரசிற்கான தேறிய கொடுகடன் 1985 இன் ரூ. 57,930 இலட்சம் அல்லது 40 சதவீதங்கொண்ட மிகக்கூடியளவு

அதிகரிப்பிற்கு எதிராக ரூ. 21,980 இலட்சம் அல்லது 11 சதவீதத்தினுல் அதிகரித்தது. எனினும், குறைந்த வளர்ச்சி காணப்பட்டபோதும் மொத்த உள்நாட்டுக்கொடுகடனில் அரசிற்கான தேறிய கொடுகடனின் பங்கு 1984 இல் 29 சதவீதத்திலிருந்து 1985 இல் 34 சதவீதத்திற்கும் 1986 இல் மேலும் 35 சதவீதத்திற்கும் அதிகரித்தது. இதற்கு இவ்வாண்டில் தனியார்துறைக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சி சார்பு ரீதியில் குறைவாக இருந்தமையே பெருமளவு காரணமாகும். 1986 இல் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட உயர்வு அரசிற்கான மொத்தக்கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 19,410 இலட்சம் அல்லது 8 சதவீதங்கொண்ட அதிகரிப்பினதும், அரசின் வைப்புக்கள், காசுநிலுவைகள் ரூ. 2,570 இலட்சத்தால் அல்லது ·5 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றமையினதும் இணைந்த விளைவாகும். 1986 இல் அரசிற்கு மத்தியவங்கியினுல் வழங்கப்பட்ட கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 75,110 இலட்சம் அல்லது 49 சதவீதங்கொண்ட மிகக்கூடிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 20,850 இலட்சத்தினுல் அல்லது 9 சதவீதத்தினுல் அதிகரித்தது. மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட அரச கடன்பாடும் தற்காலிக முற்பணங்களில் எற்பட்ட ரூ. 4,060 இலட்சங்கொண்ட அதிகரிப்பு, அரச, அரச உத்தரவாதப்பிணைகளின் உடமைகளில் ஏற்பட்ட ரூ. 16,790 இலட்சங்கொண்ட உயர்வு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை அரசிற்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் இவ்வாண்டில் ரூ.1,440 இலட்சத்தினுல் அல்லது 5 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. 1986 இல் அரசு வங்கித்தொழில்முறையைக் குறைந்தளவிற்கு நாடியமை வங்கியல்லாத தனியார்துறையின் திறைசேரி உண்டியல் உடமைகள் 1985 இறுதியில் ரூ. 16,590 இலட்சத்திலிருந்து 1986 இறுதியில் ரூ. 39,090 இலட்சங்களுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையினுல் இயலுவதாயிற்று. அத்துடன் 1986 பெப்புருவரியில் ரூ. 17,790 இலட்சங்கொண்ட மத்தியவங்கி இலாபங்கள் மாற்றல் செய்யப்பட்டமையும் வங்கித் தொழில்முறையிலிருந்து கடன்படவேண்டிய தேவையைக் குறைத்தது.

இவ்வாண்டில் அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், ஏனைய தனியார்துறை என்பவற்றை உள்ளடக்கிய தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடன் 1985 இன் ரூ. 35,070 இலட்சம் அல்லது 10 சதவீதங்கொண்டதொரு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 26,840 இலட்சத்தினுல் அல்லது 7 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடனின் அதிகரிப்பில் பெரும்பங்கு (84 சதவீதம்) ஏனைய தனியார்துறைக்கூறுகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் காரணமாகவே ஏற்பட்டது. எனினும் 1986 இல் அத்தகைய கொடுகடன் 1985 இன் ரூ. 34,800 இலட்சம் அல்லது 12 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 22,630 இலட்சம் அல்லது 7 சதவீதத்தினுல் மட்டுமே உயர்வுற்றது. ஏனைய தனியார்துறைக் கூறுகளுக்கான கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கியமாகக் கடன்கள் (ரூ. 16,290 இலட்சம்) மேலதிகப்பற்றுக்கள் (ரூ. 6,800 இலட்சம்) வடிவிலேயே இருந்தன. அதேவேளை இறக்குமதி உண்டியல்களின் உடமைகள் 1986 இல் ரூ. 820 இலட்சத்தினுல் வீழ்ச்சியடைந்தன.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.45

### நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்


| விடயம் | 1984 திசெம்பர் | 1985 திசெம்பர் | 1986 திசெம்பர் | மாற்றம் 1984/1985 தொகை | மாற்றம் 1984/1985 சதவீதம் | மாற்றம் 1985/1986 தொகை | மாற்றம் 1985/1986 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக்கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 8,560.9 | 9,815.5 | 11,570.0 | + 1,254.6 | + 14.7 | + 1,754.4 | + 17.9 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 8,262.9 | 8,945.5 | 9,609.3 | + 682.6 | + 8.3 | + 663.8 | + 7.4 |
| குறுகிய பண நிரம்பல் (M[1]) ... | 16,823.8 | 18,761.0 | 21,179.3 | + 1,937.2 | + 11.6 | + 2,418.2 | + 12.9 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 26,603.5 | 29,647.9 | 29,681.0 | + 3,044.4 | + 11.4 | + 33.2 | + 0.1 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 526.8 | 633.5 | 702.2 | + 106.7 | + 20.3 | + 68.7 | + 10.8 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 5,508.8 | 5,809.5 | 4,742.1 | + 300.7 | + 5.5 | — 1,067.3 | — 18.4 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) ... | 20,567.9 | 23,204.9 | 24,236.7 | + 2,637.0 | + 12.8 | + 1,031.8 | + 4.4 |
| **விரிந்த பணநிரம்பல் (M2)** ... | **43,427.3** | **48,408.9** | **50,860.3** | **+ 4,981.6** | **+ 11.4** | **+ 2,451.4** | **+ 5.1** |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 49,926.2 | 59,226.1 | 64,108.8 | + 9,299.9 | + 18.6 | + 4,882.7 | + 8.2 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 14,554.4 | 20,347.6 | 22,546.1 | + 5,793.2 | + 39.8 | + 2,198.5 | + 10.8 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 18,164.6 | 25,657.9 | 27,599.4 | + 7,493.3 | + 41.3 | + 1,941.5 | + 7.6 |
| மத்திய வங்கியால் ... | 15,249.1 | 22,760.6 | 24,846.0 | + 7,511.5 | + 49.3 | + 2,085.5 | + 9.2 |
| வர்த்தக வங்கிகளால் ... | 2,915.5 | 2,897.3 | 2,753.4 | — 18.1 | — 0.6 | — 144.0 | — 5.0 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 3,610.2 | — 5,310.3 | — 5,053.3 | — 1,700.1 | — 47.1 | + 257.0 | + 4.8 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 35,371.8 | 38,878.5 | 41,562.7 | + 3,506.7 | + 9.9 | + 2,684.2 | + 6.9 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,567.6 | 1,304.3 | 1,424.5 | — 263.3 | — 16.8 | + 120.2 | + 9.2 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,148.2 | 4,437.9 | 4,738.5 | + 289.7 | + 7.0 | + 300.6 | + 6.8 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 29,656.0 | 33,136.3 | 35,399.7 | + 3,480.3 | + 11.7 | + 2,263.4 | + 6.8 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 9,964.1 | 9,272.7 | 8,859.1 | — 691.4 | — 6.9 | — 413.6 | — 4.5 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | — 16,463.0 | — 20,089.9 | — 22,107.6 | — 3,626.9 | | — 2,017.7 | |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 9,982.6 | — 13,197.2 | — 15,332.4 | — 3,214.5 | | — 2,135.2 | |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 6,506.3 | — 7,186.9 | — 6,880.9 | — 680.7 | | + 306.0 | |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 25.9 | 294.2 | + 105.7 | + 268.3 | | — 188.6 | |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | **43,427.3** | **48,408.9** | **50,860.3** | **+ 4,981.6** | **+ 11.4** | **+ 2,451.4** | **+ 5.1** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: அடையாளங்கள் M2 இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

## வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

1985 இன் ரூ. 2,630 இலட்சம் அல்லது 17 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக, 1986 இல் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் ரூ. 1,200 இலட்சம் அல்லது 9 சதவீதத்தினால் அதிகரித்தன. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவிற்கான முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களை முக்கியமாகப் பிரதிபலிக்கின்றவிதத்தில் இவ்வாண்டின் முதல் ஐந்துமாத காலப்பகுதியில் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் ரூ.2,850 இலட்சத்தினால் அல்லது 22 சதவீதத்தினால் அதிகரித்தது.

1986 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் 1985 ஆம் ஆண்டின் ரூ. 2,900 இலட்சம் அல்லது 7 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ அதை ஒத்ததாக ரூ. 3,010 இலட்சம் அல்லது 7 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக உருவான குறைவடைந்த வருவாய்களின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டில் இரு அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தன. அதேவேளை தேசிய புடவைக்கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனைநிலையம், இலங்கைச் சீமெந்துக்கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை ஆகியன 1986 இல் வர்த்தக வங்கிகளிடமிருந்தான அவற்றின் கடன்பாடுகளைக் கணிசமானளவில் குறைக்கக் கூடியனவாக இருந்தன.

### வர்த்தக வங்கித்தொழில்

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களில் (தேறிய) கணிசமான வீழ்ச்சியும், குறிப்பிட்ட நிறுவனங்களினால் வேறு இடங்களில் முதலீடு செய்வதற்காக குறிப்பிடத்தக்களவு நிதி மீளப் பெறப்பட்டமையும் காணப்பட்ட போதும் வர்த்தக வங்கித்தொழில் துறையில் 1986 இல் தொடர்ந்தும் உயர்ந்தளவு திரவநிலைமை காணப்பட்டது. இதற்கு அரசின் உயர்ந்த மட்டச் செலவினம் தொடர்ந்திருந்ததும் தனியார் துறையின் கொடுகடனுக்கான கேள்வி மந்தநிலையில் காணப்பட்டமையுமே முக்கிய காரணங்களாகும்.

வங்கிகளுக்கிடையிலான நிதிக்குக் காணப்பட்ட நலிவுற்ற கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1986 இல் வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச்சந்தையின் தொழிற்பாடுகள் மிகவும் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இச்சந்தையில் வெளிநின்ற கடன்வழங்கல்கள் 1985 இறுதியில் ரூ. 2,870 இலட்சங்களிலிருந்து 1986 இறுதியில் ரூ. 3,160 இலட்சங்களுக்கு உயர்வடைந்தது. அதேவேளை கடன் வழங்கல் வீதங்கள் ஆண்டிற்கு 9.5 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு தளம்பலுற்றன. 1985 இன் ஒப்பிடத்தக்க வீச்சு ஆண்டிற்கு 11 இலிருந்து 15 சதவீதமாக இருந்தது. வங்கிகளுக்கிடையிலான நிதிக்கிருந்த குறைவான கேள்வி வர்த்தகவங்கிகளை அவற்றின் மிகையான நிதியினை மற்றும் குறுங்கால முதலீட்டுத் துறைகளில் பயன்படுத்துவதற்குத் தூண்டின. இதில் கணிசமான பகுதி இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையை நோக்கி திருப்பப்பட்டது. இவ்வாண்டில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் வெளிநின்ற தேறிய விற்பனைகள் ரூ. 11, 680 இலட்சத்திற்கும் ரூ. 26,220 இலட்சத்திற்கு மிடையில் தளம்பலுற்றன. அதேவேளை மத்திய வங்கிப் பிணைகளிலான வர்த்தக வங்கிகளின் முதலீடுகள் 1985 இறுதியின் ரூ. 8,900 இலட்சத்திலிருந்து 1986 இறுதியில் ரூ. 19,050 இலட்சங்களுக்கு உயர்வடைந்தன.

1986 ஒகத்தில் மத்தியவங்கி வர்த்தக வங்கிகளினுல் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் மீது வெளிநின்றதொகை மீதான உச்சஎல்லையை புறக்கீடுசெய்தது. வங்கிகளினுல் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்றதொகை ரூ. 6,050 இலட்சத்தினுல் அதிகரித்து ஆண்டின் இறுதியில் ரூ. 16,730 இலட்ச மட்டத்தையடைந்தது.

1986 இல் வர்த்தக வங்கிகள் வாடிக்கையாளர் பணிகளின் தகைமையினை முன்னேற்றும் பொருட்டு மேலும் நடவடிக்கைகளை எடுத்தன. இது தொடர்பாக எடுக்கப்பட்ட வழிமுறைகள் வங்கித்தொழில் நேர நீடிப்பு, வங்கித்தொழில் தொழிற்பாடுகளின் கணணிமயமாக்கல், மனிதவலு அபிவிருத்தியைச் செறிவாக்கல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. வாடிக்கையாளரின் நன்மைக்காக வங்கியொன்று தன்னியக்க ரெல்லர் வசதிகளை அறிமுகப்படுத்தியது.

இவ்வாண்டுக்காலத்தில் இலங்கையில் 24 வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் தொழிற்பட்டன. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்கள் 1986 இறுதியில் ரூ. 196,190 இலட்சமாக விளங்கி இவ்வாண்டின் இறுதியில் ரூ. 4,600 இலட்சங்கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் கூட்டுக்கடன்களில் பங்கேற்றல், ஒப்புதல் பெற்றவதிவோருக்கான முற்பண ஒதுக்குகள், கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் வரும் செயற்றிட்டங்களுக்கு நிதியிடல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

1986 இல் வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங்கள் 1985 இன் மிகப்பெருமளவு அதிகரிப்பான ரூ. 58,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 39,370 இலட்சத்தினுல் உயர்வடைந்தன. 1986 இல் மூலவளங்களில் ஏற்பட்ட சிறிய வளர்ச்சிக்கு வைப்புக்களின் வளர்ச்சி முன்னைய ஆண்டினைவிட குறைவாக இருந்தமை பெருமளவிற்குக் காரணமாகும். 1986 இல் மொத்த வைப்புப்பொறுப்புக்கள் 1985 இன் மிகக்கூடியளவு அதிகரிப்பான ரூ. 55,280 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 18,430 இலட்சத்தினுல் அதிகரித்தன. 1986 இல் வைப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி தவணை, சேமிப்பு வைப்புக்கள் (இரு அரச வங்கிகளின் நீண்டகாலவைப்புக்களையும் உள்ளடக்கும்) கேள்வி வைப்புக்கள் என்பனவற்றில் முறையே ஏற்பட்ட ரூ. 10,730 இலட்சம், ரூ. 7,700 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் ரூ. 15,870 இலட்சத்தினுல் உயர்வடைந்தன. இது முறையே ரூ. 11,070 இலட்சம், ரூ. 4,800 இலட்சம் கொண்ட வங்கிகளுக்கிடையேயான கடன்பாடுகளையும் (மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகள் உட்பட) வெளிநாட்டுக்கடன்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. பல்வேறுபட்ட மீள் நிதியிடல் திட்டங்களின்கீழ் அதிகரித்த வசதிகள் வழங்கப்பட்டமையின் விளைவாக இவ்வாண்டில் மத்தியவங்கியிலிருந்தான கடன்பாடுகள் ரூ. 9,750 இலட்சத்தினுல் அதிகரித்தன. அதேவேளை வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் 1986 இல் ரூ. 2,610 இலட்சத்தினுல் உயர்வடைந்தமையினுல் மூலவள அடிப்படை உயர்ந்தது.

அட்டவணை 1.46

**வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும், பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| துறை | 1984 முடிவில் 1985 முடிவில் | 1985 முடிவில் 1986 முடிவில் |
|---|---|---|
| 1. அரசு ... ... ... | 944.8 | 297.4 |
| 2. மத்திய வங்கி ... ... ... | — 2,350.7 | 634.0 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் ... ... ... | — 100.5 | — 1,670.0 |
| 4. கூட்டுறவு நிறுனங்கள் ... ... ... | 420.5 | 21.5 |
| 5. ஏனைய தனியார் ... ... ... | 66.0 | — 163.5 |
| 6. வங்கிகளுக்கிடையில் ... ... ... | — 489.4 | — 705.4 |
| 7. வெளிநாட்டு ... ... ... | 530.5 | 175.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: சய அடையாளம் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டினைக் குறிக்கின்றது.

வர்த்தக வங்கிகளின் மூலவளங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் தேறிய அடிப்படையில் அவற்றின் பயன்பாடும் அட்டவணை 1.46 இல் காட்டப்பட்டுளன. 1986 இல் அரச கூட்டுத்தாபனங்கள் வர்த்தக வங்கி மூலவளங்களின் முதன்மைப் பயன்பாட்டாளராக மாறி ரூ. 16,700 இலட்சங்கொண்ட தொகையைப் பயன்படுத்தின. இது வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி (ரூ. 13,690 இலட்சம்) கடன்பாடுகளில் ஏற்பட்ட அதிரிப்பு (ரூ. 3,010 இலட்சம்) என்பனவற்றின் இணைந்த தாக்கமாகும். அதேவேளை ஏனைய தனியார்துறை வர்த்தக வங்கி மூலவளங்களில் ரூ. 1630 இலட்சம் வரையிலான தொகையைப் பயன்படுத்தியது.

1986 இல் வங்கிகளுக்கிடையிலிருந்தான துறையிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கான மூல வளங்களின் தேறிய கூட்டுத்தொகை ரூ. 7,050 இலட்சமாக அமைந்தது. அதேவேளை கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக வர்த்தக வங்கிகளின் தேறிய மூலவளங்களைக் கட்டியெழுப்புவதற்காக மத்திய வங்கி ரூ. 6,340 இலட்சங் கொண்ட தொகையை உதவியது. இது மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் (ரூ. 9,750 இலட்சம்) மத்திய வங்கியில் வைத்திருக்கப்பட்ட ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினையும் (ரூ. 6,740 இலட்சம்) உள்ளடக்கியிருந்தது. எனினும் இது வர்த்தக வங்கிப் பிணைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் (ரூ. 10,150 இலட்சம்) ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. இவ்வாண்டில் அரசதுறையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய மூலவளங்கள் ரூ. 2,970 இலட்சமாக விளங்கியவேளையில் வர்த்தக வங்கிகளின் மூலவளங்களைக் கட்டியெழுப்புவதற்கான வெளிநாட்டுத் துறையின் பங்களிப்பு ரூ. 1,750 இலட்சமாக அமைந்து மிகச் சிறிதாக விளங்கியது.

**வங்கிக்கிளை விரிவாக்கம்**

1986 திசெம்பர் 31 ஆம் நாளன்று அமெரிக்க வங்கி அதன் பணிகளையும் நடவடிக்கைகளையும் இலங்கையில் நிறுத்திக்கொண்டது. அதேவேளை வரையறுக்கப்பட்ட துபாய் வங்கியின் வியாபாரம் வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கு

யூனியன் வங்கியினுல் 1986 திசெம்பரில் பொறுப்பேற்கப்பட்டது. இது வரையறுக்கப்பட்ட துபாய் வங்கியின் உடமைமாற்றத்தின்கீழ் 1985 ஏப்பிரலில் வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கு யூனியன் வங்கியினுல் முழுப்பங்குடைமைகளும் கொள்வனவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்பட்டதொன்ருகும். அதே வேளை அனைத்து நாடுகளிலும் இரண்டு வங்கிகளினதும் வியாபாரத்தை வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கு யூனியன் வங்கி என்ற பெயரின் கீழ் கொண்டு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இம்மாற்றங்களின் விளைவாக இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 25 இலிருந்து 23 இற்குக் குறைவடைந்தது.

வர்த்தக வங்கிகளின் கிளையமைப்பின் விரிவாக்கவீதம் 1986 இல் மேலும் மெதுவான போக்கையடைந்து மீள அமைக்கப்பட்ட வேளாண்மைப்பணி நிலையங்கள் உட்பட வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1985 இன் அதிகரிப்பான 11 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 3 இனுல் மட்டும் உயர்வடைந்தது. இதன்படி 1986 இறுதியில் வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,036 ஆகக் காணப்பட்டது.

இவ்வாண்டில் இலங்கை வங்கி 3 புதிய கிளைகளைத் திறந்ததுடன் ஒரு வேளாண்மைப் பணிக்கிளையை மீளமைத்தது. அத்துடன் கொழும்பில் இரண்டு மெற்ருேபொலிட்டன் கிளைகளை ஒன்று சேர்த்தவேளையில் விரிவாக்க அலுவலகமொன்றை மூடியது. ஆண்டின் இறுதியில் இலங்கை வங்கி 670 தொழிற்படும் கிளைகளைக் கொண்டிருந்ததுடன் இதில் 238 முதன்மைக் கிளைகளாக இருந்தன. 1985 இறுதியில் ஒப்பிடத்தக்க கிளைகளின் எண்ணிக்கை முறையே 669 ஆகவும், 236 ஆகவும் காணப்பட்டது. இவ்வாண்டில் மக்கள் வங்கியும், வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் முறையே 4 கிளைகளையும், 1 கிளையையும் திறந்தன. இவ்விரண்டு வங்கிகளினதும் கிளைகளின் மொத்த எண்ணிக்கை முறையே 297 ஆகவும், 15 ஆகவும் காணப்பட்டன. அதேவேளை ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா அதன் அநுராதபுரக் கிளையை 1986 யூலையில் மூடியது.

தேசிய சேமிப்பு வங்கி 1986 இல் 3 புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் 1986 இறுதியில் அதன் கிளைகளது மொத்த எண்ணிக்கை 60 ஆகியது. இவ்வாண்டில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி திறக்கப்பட்டதன்மூலம் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை ஐந்தாகியது. இவ்வைந்து வங்கிகளும் அவற்றின் தொழிற்பாட்டுப் பிரதேசத்தில் 15 புதிய கிளைகளைத் திறந்தமையினுல் 1986 இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை 32 ஆகியது.

## வட்டி வீதம்

வட்டிவீத அமைப்பின் கீழ்நோக்கிய அசைவினை உறுதிப்படுத்துகின்ற வீதத்தில் தேசிய சேமிப்பு வங்கியும் வர்த்தக வங்கிகளும் தமது வைப்பு வீதங்களை 1986 இல் மேலும் குறைத்துக் கொண்டன. இது நிதிக்கூட்டு நிலையங்கள் அவற்றின் வைப்பு வீதங்களைக் குறைப்பதற்கும் தூண்டியது. வைப்பு வீதங்களில் ஏற்பட்ட குறைப்பு வர்த்தக வங்கிகளின் நிதிச் செலவின் குறைவிற்கு வழிவகுத்தமையினுல் அவை தமது கடன்வழங்கல்கள் வீதங்களையும் ஓரளவிற்குக் குறைப்பதற்கு இயலக்கூடியனவாக இருந்தன.

1986 பெப்புருவரியிலிருந்தும் தேசிய சேமிப்பு வங்கி அதன் ஓராண்டு வைப்புக்கள் மீதான வட்டி வீதத்தை ஆண்டிற்கு 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கும் ஆறு மாத வைப்புக்கள் மீதான வட்டி வீதத்தை ஆண்டிற்கு

13 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும் குறைத்தது. எனினும் சேமிப்பு வைப்புக்கள் மற்றும் சேமிப்புச் சான்றிதழ்கள் மீதான வட்டி வீதங்கள் முறையே ஆண்டிற்கு 12 சதவீதமாகவும், 11 சதவீதமாகவும் மாற்றமின்றி இருந்தன. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகள் ஓராண்டு வைப்புக்கள் மீதான தமது வீதத்தைப் பல தடவைகள் குறைந்தன. இவற்றினைத் தொடர்ந்து 1985 இறுதியில் ஆண்டிற்கு 18 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்குமிடைப்பட்ட வீச்சில் காணப்பட்ட 12 மாதங்களுக்கான வைப்பு வீதம் 1986 இறுதியில் ஆண்டிற்கு 14 சதவீதத்திற்கும் 8.5 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிற்கு குறைவடைந்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் 6 மாத வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 19 இலிருந்து 9 சதவீதம் வரையான வீச்சிலிருந்து 1986 இல் 13 இலிருந்து 8.5 சதவீத வீச்சிற்குக் குறைவடைந்தது. இதே காலப்பகுதியில் 3 மாத வைப்புக்களின் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 17 இலிருந்து 9 சதவீத வீச்சிலிருந்து ஆண்டிற்கு 12 இலிருந்து 8 சதவீத வீச்சிற்குக் குறைவடைந்தது. இக்குறைப்புக்களைத் தொடர்ந்து நிதிக் கூட்டுநிலையங்களும் ஓராண்டு வைப்புக்கள் மீதான அவற்றின் வைப்பு வீதங்களை ஆண்டிற்கு 18 இலிருந்து 22 சதவீத வீச்சிலிருந்து இவ்வாண்டில் ஆண்டிற்கு 16 இலிருந்து 21 சதவீத வீச்சிற்குக் குறைத்துக் கொண்டன. மூன்று மாத, ஆறு மாத வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களும் குறைக்கப்பட்டன.


DISCARDED

ஏற்றுமதியாளர்களுக்கான கடன்பாட்டுச் செலவினைக் குறைக்கும்பொருட்டு மத்திய வங்கியின் இரண்டு ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டங்களின் அதாவது வகை 1, வகை 2 இன் கீழான மீள் நிதியிடல் 1985 திசெம்பர் 30 ஆம் நாளிலிருந்து 2 சதவீதப் புள்ளிகளினுல் குறைக்கப்பட்டது. இது வர்த்தக வங்கிகள் ஏற்றுமதிக் கொடுகடன் மீதான அவற்றின் கடன் வழங்கல் வீதங்களை குறைப்பதற்கு இயலச் செய்தது. இது தவிர வைப்பு வீதங்களின் கீழ்நோக்கிய திருத்தத்தினுலும் சிறப்புத்திட்டத்தின் கீழான ஒதுக்குத் தேவைகள் புறக்கீடு செய்யப்பட்டதனுலும் தோன்றிய நிதிச்செலவின் குறைப்பினுல் வங்கிகளின் முன்னுரிமைத்துறைகளுக்கான அவற்றின் கடன் வழங்கல்வீதங்களைக் குறைக்கக் கூடியனவாக இருந்தன.

இவ்வாண்டுக்காலத்தில் குறுங்காலப் பணச்சந்தை வீதங்களிலும் குறைப்புக்கள் காணப்பட்டன. 1986 சனவரியில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல்களின் மீதான வீதம் ஆண்டிற்கு 11.5 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்களின் விற்கும் வாங்கும் வீதங்கள் ஆண்டிற்கு 11.3 சதவீதம், 11.5 சதவீதம் ஆகியவற்றிலிருந்து முறையே ஆண்டிற்கு 10.8 சதவீதத்திற்கும், 11.0 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றன. 1986 நவெம்பரில் இவ்வீதங்கள் மேலும் முறையே 10 சதவீதத்திற்கும், 11 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. சனவரியில் மத்திய வங்கிப் பிணைகளின் நறுக்கு வீதம் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை வர்த்தக வங்கிகளின் வைப்புச் சான்றிதழ்கள் மீதான அவற்றின் வட்டி வீதங்கள் இவ்வாண்டில் ஆண்டிற்கு 8 இலிருந்து 17 சதவீத வீச்சிலிருந்து ஆண்டிற்கு 6 இலிருந்து 15 சதவீத வீச்சிற்குக் குறைத்துக் கொண்டன. பல வங்கிகளில் காணப்பட்ட மிகையான திரவநிலைமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வங்கிகளுக்கிடையேயான அழைப்பு பணச்சந்தையின் ஆகக் கூடிய வீதம் 1985 இறுதியில் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து 1986 இறுதியில் ஆண்டிற்கு 12.75 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி.

குறுங்கால வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய பெயர்ச்சியைத் தொடர்ந்து நீண்டகால வட்டி வீதங்களும் வீழ்ச்சியுறவேண்டியதாயிற்று. 1986 சனவரியி லிருந்து மத்திய வங்கி நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகைகள் II, III, IV இன் கீழான மீள் நிதியிடல் கடன்களின் மீதான வட்டி வீதங்களை 2 சதவீதப் புள்ளிகளினுல் குறைத்தது. அதே மாதத்திலிருந்து அரச பிணைகளின் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் அதன் முதிர்ச்சிக் காலம் 6 ஆண்டுகளாக மாற்ற மின்றியிருந்தது. அதேவேளை அரச ஈட்டு முதலீட்டு வங்கி அனைத்து வகைக் கடன்கள் மீதான வட்டி வீதங்களை புள்ளிகளால் குறைத்துக் கொண்டது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் 2 சதவீத மீள் நிதியின் திட்டத்திற்குப் புறம்பாக வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான அதன் கடன் வழங்கல் வீதங்களை ஆண்டிற்கு 14 முதல் 21 சதவீத வீச்சிலிருந்து ஆண்டிற்கு 14 முதல் 18 சதவீத வீச்சிற்கு கீழ்நோக்கித் திருத்தியது. இவ்வாண்டில் தேசிய சேமிப்பு வங்கியும் கூட அதன் கடன் வழங்கல் வீதங்களை ஆண்டிற்கு 12 முதல் 21 சதவீத வீச்சிலிருந்து ஆண்டிற்கு 12 முதல் 20 சதவீத வீச்சிற்குக் குறைத்தது.

கடன் வழங்கலில் வங்கிகளுக்கிடையே போட்டியை அதிகரிக்கும் பொருட்டு மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக்கடன் வழங்கல் வீதங்களை கிழமையடிப்படையில் வெளியிடத் தொடங்கியது. முதன் மைக் கடன் வழங்கல் வீதம் என்பது வர்த்தக வங்கிகளினுல் அவர்களின் மிகச் சிறந்த வாடிக்கையாளர்களுக்கு விதிக்கப்படும் மிகக் குறைந்த வட்டி வீதமாகும். 1986 இல் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 14.0 முதல் 15.6 சதவீதம் வரையில் தளம்பலுற்றது.

## மத்திய வங்கித்தொழில்

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1986 இறுதியில் ரூ. 431,640 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டின் மிகக் கூடியளவு அதிகரிப்பான ரூ. 78,870 இலட்சத்துடன் (24 சதவீதம்) ஒப்பிடுகையில் இவ் வாண்டில் ரூ. 20,050 இலட்சம் (5 சதவீதம்) கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

சொத்துக்கள் பக்கத்தில், மத்திய வங்கியின் பன்னுட்டு ஒதுக்கு (மொத்தம்) தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வீழ்ச்சியடைந்தது. 1986 இல் இவ்வீழ்ச்சி ரூ. 18,900 இலட்சம் அல்லது 16 சதவீதமாக இருந்தது. வெளிநாட்டுக் காசு மற்றும் நிலுவைகளில் ரூ. 35,990 இலட்சங் கொண்ட குறைப்புக் காணப்பட்ட தெனினும் வெளிநாட்டுப் பிணைகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் முத லீட்டில் ரூ. 17,100 இலட்சங் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டது.

ஏனைய சொத்துக்கள் கணக்குகள் நீங்கலான வங்கியின் உள்நாட்டுச் சொத் துக்கள் 1986 இல் ரூ. 31,110 இலட்சத்தினுல் (12 சதவீதம்) அதிகரித்ததுடன் இது இத்தகைய சொத்துக்களின் அனைத்து முதன்மை வகைகளிலும் பிரதிபலிக்கப் பட்டது. இவ்வதிகரிப்பில் நேரடியான முற்பணங்கள், அரச, அரச உத்தரவாதப் பிணைகளில் முதலீடுகள் ஆகிய வடிவங்களிலான அரசிற்கான கொடுகடன் ரூ. 20,850 இலட்சங்களுக்கு வகை கூறிய வேளையில் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான முற்பணங்கள் ரூ. 10,250 இலட்சங்களைக் கொண்டிருந்தன.

1986 இல் வர்த்தக வங்கிகளுக்கான முற்பணங்கள் ரூ. 10,160 இலட்சத்தினால் உயர்வடைந்தன. இது பெருமளவுக்கு குறுங்கால மீள் நிதியிடல் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டது. முன்கூட்டிய வெளிநாட்டுச் செலாவணியின் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட (ரூ. 5,900 இலட்சம்) விரிவாக்கத்தின் முக்கிய காரணமாக வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ரூ. 7,850 இலட்சத்தினால் வளர்ச்சியுற்றன.

பொறுப்புக்கள் பக்கத்தில், வங்கியின் நாணயப் பொறுப்புக்கள் (சுற்றோட்டத்திலுள்ள நாணயமும் வைப்புக்களும்) 1986 இல் ரூ. 14,450 இலட்சத்தால் (6 சதவீதம்) வீழ்ச்சியுற்றது. இது வைப்புக்களில் ரூ. 29,890 இலட்சம் (23 சதவீதம்) கொண்ட வீழ்ச்சியினதும் நாணயச் சுற்றில் ரூ. 15,440 இலட்சம் (14 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினதும் இணைந்த விளைவாகும். பன்னாட்டு நிறுவனங்கள், வெளிநாட்டு அரசுகள், வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் வைப்புக்கள் ரூ. 16,460 இலட்சத்தால் மேலும் வீழ்ச்சியுற்ற வேளையில் வர்த்தக வங்கிகள், அரசு ஆகியவற்றின் வைப்புக்கள் முறையே ரூ. 4,450 இலட்சத்தாலும் ரூ. 4,090 இலட்சத்தாலும் வீழ்ச்சியடைந்தன. வங்கியின் ஏனைய வைப்புக்களும் ரூ. 5,260 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. மறுபக்கத்தில், அரச முகவர் நிலையங்களினதும், நிறுவனங்களினதும் வைப்புக்கள் இவ்வாண்டில் ரூ. 370 இலட்சத்தால் உயர்வடைந்தன.

இவ்வாண்டில், பொருளாதாரத்திலுள்ள மேலதிக திரவத்தன்மையை அகற்றும் பொருட்டு மத்திய வங்கி அதன் சொந்தப் பிணைகளை வெளியிடுவதனை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டில் வெளியிட்ட பிணையின் பெறுமதி ரூ. 40,790 இலட்சமாக விளங்கியவேளை ஆண்டிறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 26,040 இலட்சமாக விளங்கியது. பின்னையது 1985 இன் இறுதியில் வெளிநிற்கும் மட்டமான ரூ. 11,680 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ரூ. 17,500 இலட்சத்தால் உயர்வடைந்தமைக்கு பெரும்பாலும் பன்னாட்டு ஒதுக்கு மீள் மதிப்பீட்டுக் கணக்கு, முன்கூட்டிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான எதிர்பாராப் பொறுப்புக்கள் ஆகியவற்றின் அதிகரிப்புக்கள் காரணமாகும்.

**நாணயக் கொள்கை**

1984 இலிருந்து பின்பற்றப்பட்ட மிகக்கடுமையான நாணயக் கொள்கையின் விரிவான அமைப்பிற்குள் பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளை முன்னேற்றுவதிலேயே 1986 இல் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நெறிப்படுத்தப்பட்டது. பொருளாதாரத்தில் அதிகளவிலுள்ள திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மத்திய வங்கி தொடர்ந்தும் அதன் சொந்தப் பிணைகளை வெளியிடுவதனை மேற்கொண்ட வேளையில் நாணயக் கொள்கைக்குக் கூடியளவு சந்தை ரீதியான தன்மையினை வழங்கும் நோக்குடன் 1984 இன் முற்பகுதியில் விதிக்கப்பட்ட தொகையளவிலான கொடுகடன் கட்டுப்பாடுகளில் சில தளர்த்தப்பட்டன.

பொருளாதாரத்தின் உற்பத்திக் துறைகளில் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக இவ்வாண்டில் பல கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1986 பெப்புருவரியில் கைத்தொழில் நோக்கங்களுக்காக தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனுக்கு 1984 மேயில் கொடுகடன் எல்லைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது. வேளாண்மைக்கும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்குமான வங்கிக் கொடுகடனுக்கு கொடுகடன் எல்லைகள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே விலக்களிக்கப்பட்டவாறு தொடர்ந்தும் மாறுதிருந்தன. முன்

னுரிமைத் துறைகளுக்கு வட்டிச் செலவைக் குறைக்கும்நோக்கில் நடுத்தர, நீண்ட கால கொடுகடன் நிதியத்தின் வகைகள் II, III, IV இன் கீழான கடன்கள் மீதான மீள்நிதியிடல் வீதங்கள் 1986 சனவரியில் இரண்டு சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. அத்துடன் யூனில் ஏற்றுமதியாளர் ஒருவர் அவரின் கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினுல் அவரின் பண்டங்களை 90 நாட் களுக்குள் கப்பற்படுத்த முடியாதவிடத்து மரபுவழி (வகை 1), மரபுவழியல்லா (வகை II) ஏற்றுமதிகளுக்கு மீள் நிதியிடல் கிடைக்கத்தக்க காலம் 90 நாட்களி லிருந்து 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.

அதேவேளை, மரபுவழி, மரபுவழியல்லா ஏற்றுமதிகளின் மீள்நிதியிடல் வீதங் கள் 2 சதவீதப்புள்ளிகளால் ஆண்டுக்கு முறையே 11 சதவீதமாகவும், 6 சதவீத மாகவும் குறைக்கப்பட்டன. 4 சதவீத தள்ளுபடியைக் கவனத்தில் எடுக்கும் போது வர்த்தக வங்கிக் கடன் வழங்கல் இலாபங்களுக்கு இடமளித்த பின்பு, வகை I, வகை II இன்கீழ் கடன்படுகையின் செயற்படும் செலவு ஆண்டுக்கு முறையே 10.0 சதவீதமாகவும் 5.8 சதவீதமாகவும் குறைக்கப்பட்டன. மேலும் எந்த நேரத்திலும் மரபுவழி ஏற்றுமதிகளுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள மீள் நிதியிடலின் மொத்தத் தொகை ரூ. 15,000 இலட்சத்திலிருந்து ரூ. 16,630 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது. 1986 திசெம்பரில், உற்பத்தித் துறைகளில் நீண்டகால முதலீடுகளை மேலும் முன்னேற்றுவதற்காக வங்கியின் பொதுவான ஒதுக்குகளிலிருந்து மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத் திற்கு ரூ. 2,500 இலட்சம் கொண்ட மாற்றலொன்று செய்யப்பட்டு அதன் மூலம் நிதியத்தின் மீள்நிதியிடல் இயலளவு ரூ. 10,250 இலட்சத்திற்கு உயர்த் தப்பட்டது.

1985 முழுவதிலும் சந்தை வட்டி வீதங்களின் வீழ்ச்சிப் போக் கினைத் தொடர்ந்து, 1986 சனவரியில் முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் வீதம் ஆண்டுக்கு 11.5 சதவீதத்திலிருந்து 11.0 சதவீதத்திற்கு வீழ்ச்சி யுற்றது. வர்த்தக வங்கிகளை அவற்றின் கடன்வழங்கல் வீதங்களை குறைப்பதற்கு மேலும் ஊக்கமளிப்பதற்காக 1984 நவெம்பரிலிருந்து நடைமுறையிலுள்ள சிறப்பு ஒதுக்கு வகை முறையின்கீழ் சிறப்பு ஒதுக்குகளைப் பேணுவதற்கான தேவை 1986 பெப்புருவரியிலிருந்து மீளப்பெறப்பட்டது. இது ரூ. 7,210 இலட்சம் கொண்ட கடன்வழங்கக்கூடிய நிதியத்தினை வழங்கி வர்த்தக வங்கிகளை அவற்றின் நிதியங் களின் செலவைக் குறைப்பதற்கு உதவியது. இவ்வழிமுறைகளுக்கு இணங்கும் வகை யில் அவற்றின் வைப்பு வீதங்களைக் குறைத்து அதன்பின்பு முன்னுரிமைத் துறைகளுக்கான முற்பணங்கள் மீதான அவற்றின் கடன் வழங்கல் வீதங்களையும் குறைத்தன

இதேவேளை, மேலதிக திரவத்தன்மையை ஈர்க்கும் நோக்கில் மத்திய வங்கி தொடர்ந்தும் அதன்சொந்தப் பிணைகளை வழங்கி அதன்மூலம் ஒதுக்குப் பணத் தளத்தினைக் குறைத்தது. அப்பிணைகளின் வெளிநிற்கும் மட்டம் 1985 இன் இறுதியின் ரூ. 11,680 இலட்சத்திலிருந்து 1986 இறுதியில் ரூ. 26,040 இலட் சத்திற்கு உயர்வடைந்தது.

மிகக் கடுமையான நாணயக் கொள்கையின் விரிவான அமைப்பிற்குள் முன்னுரிமைத் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்களை சீராக்குவதற்கான தேவை யின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசிய கொடுகடன் திட்டத்தின் நியதியில் 1986 இல் மத்திய வங்கி கொடுகடன் அபிவிருத்திகளை கண்காணித்தது. இத் திட்டத்தின்கீழ் தனியார்துறைக்கான வெளிநிற்கும் கொடுகடன் (அதாவது

கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிலையங்கள், உண்மையான தனியார்துறை) 1986 இறுதியில் ரூ. 436,590 இலட்சத்தை அடையுமென மதிப்பிடப்பட்டது. இது 1985 இன் ரூ. 34,350 இலட்சம் அல்லது 10 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்கு எதிராக ரூ. 48, 520 இலட்சம் அல்லது 12 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். வேளாண்மை, ஏற்றுமதிகள், கைத்தொழில் ஆகியன கொடுகடனின் துறைரீதியிலான ஒதுக்கலில் தொடர்ந்தும் முன்னுரிமைக் துறைகளாக விளங்கின.

1986 இல் கொடுகடன் துறையின் மிகவும் முக்கிய பண்புயாதெனில் கொடுகடன் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டமான கொடுகடன் பயன்படுத்தப்பட்டமையேயாகும். கொடுகடனின் மெதுவான வெளிப்பாய்ச்சல் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து வந்ததுடன் ஆண்டு முடிவில் வெளிநிற்கும் மட்டம் இலக்கைவிட ரூ. 26,290 இலட்சத்தால் அல்லது 6 சதவீதத்தால் பின்தங்கியிருந்தது. முன்னுரிமைத்துறைகள் கொடுகடனைக் குறைத்துப் பயன்படுத்தியமைக்கு பல காரணங்கள் உள்ளன. முதலில், மரபுவழி ஏற்றுமதி விலைகளின் மந்தநிலை ஏற்றுமதிக் கொடுகடனுக்கான கேள்வியினை பெயரளவிலான நியதிகளில் குறிப்பாக கப்பற்படுத்தலுக்கு முன்பான கொடுகடனைக் குறைத்தது. இரண்டாவதாக, அரசுக்கு சொந்தமான பெருந்தோட்டத் துறைக்கான நடுத்தர முதலீட்டுச் செயற்றிட்டத்தினைச் செயற்படுத்துவதில் தாமதம் எற்பட்டமையாகும். மூன்றுவது இவ்வாண்டில் சில மாவட்டங்களில் காணப்பட்ட பாதகமான காலநிலைகள் வேளாண்மைத் துறையிலிருந்தான கொடுகடன் கேள்வியினை மேலும் பாதிப்படையச் செய்தன.

1986 இல் தேசிய கொடுகடன் திட்டம் நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளையும் (களுத்துறை, குருநாகல், மாத்தறை, அநுராதபுரம்) நான்கு நீண்டகால கொடுகடன் நிறுவனங்களான இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பனவற்றின் கடன் வழங்கல் நடவடிக்கைகளையும் உள்ளடக்குவதற்காக விரிவாக்கப்பட்டது. இந் நிறுவனங்களின் கொடுகடன் பாய்ச்சல்கள் பொதுவாக பொருளாதாரத்தின் நலிவுற்ற முன்னுரிமைத் துறைகளுக்கானதாக விளங்கின.

புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டு வளர்ச்சி வீதம் 1985 இறுதியில் 1.5 சதவீதத்திலிருந்து 1986 இறுதியில் 9 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் சராசரி ஆண்டு வளர்ச்சி 1985 இன் 1.5 சதவீதத்திலிருந்து 1986 இல் 8 சதவீதமாக உயர்வடைந்தது. இவ்வாண்டின் விலை உயர்ச்சிக்கு, பாதகமான காலநிலையினுல் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு விடயங்களின் நலிவுற்ற நிரம்பல் நிலைமையும் சில பகுதிகளில் காணப்படும் உள்நாட்டு குழப்பங்களுமே பெருமளவுக்குக் காரணமாகும். அத்துடன் 1985 இன் பிற்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் உடைகளுக்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பும் சாராயம், பியர், புகையிலை மீதான கலால் தீர்வையின் அதிகரிப்புக்களும் 1986 இன் விலை அதிகரிப்புக்கு பங்களித்தது. கேள்வியின் பக்கத்தில், மேலதிக திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், முன்னுரிமையல்லாத் துறைக்கான கொடுகடன் அளவின்மீதான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருந்தமை போன்ற நாணயக் கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல் நாணய, கொடுகடன் கூட்டுக்களின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்த உதவியதுடன் அதன் மூலம் விலைகள் மீதான தாக்கத்தினையும் தளர்த்தின.